**வரையறுக்கப்பட்ட மில்கோ (தனியார்) கம்பனி -2017**

---

வரையறுக்கப்பட்ட மில்கோ (தனியார்) கம்பனியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் அடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற மீளாய்வாண்டிற்கான கம்பனி செயற்பாடுகள் தொடர்பான எனது அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணபிக்கப்பட்டுள்ளன.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பணிப்பாளர் சபையின் பொறுப்புக்கள்**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

---

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க பேணப்படும் கணக்காய்வு அடிப்படை மீது இந்த நிதிக்கூற்றுக்களிற்கு கருத்தொன்றினை தெரிவித்தல் எனது பொறுப்பாகும்.

**1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

(அ) தேவையினை உரிய முறையில் இனங் காணாமல் கொழும்பு தொழிற்சாலையில் பொருத்துவதற்காக 2011 ஜனவரி 20 திகதி லீஸிங் அடிப்படையில் கொள்வனவு செய்திருந்த ரூபா 104,177,779 தொகை பெறுமதியான யோகட் கலவை இயந்திரம் ஒன்று 2013 ஆகஸ்ட் 30 திகதி பொலன்னறுவை தொழில்சாலையில் பொருத்தப்பட்டிருந்த போதிலும் இயந்திரத்தில் காணப்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக அதனை கொள்வனவு செய்த திகதி முதல் கணக்காய்வுத் திகதியாகிய 2019 திசெம்பர் மாதம் வரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன்படி குறிப்பிட்ட இயந்திரத்தின் பெறுமதிக்காக இலங்கை கணக்கீட்டு நியமம் 36 இன் படி சேதப்படுதல் சீராக்கல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அதன்படி செயற்பட்டிருக்கவில்லை.

(ஆ) கம்பனியினால் நிலையான சொத்துக்கள் தொடர்பாக பௌதீக மெய்மையாதல் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், நிலையான சொத்துக்களின் உளமை தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் 2017 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 6,698.63 மில்லியனிற்கான நிலையான சொத்துக்களின் உலமை தொடர்பாக கணக்காய்வின் போது பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாமல் போனது.

(இ) படல்கம பால் தயாரிப்பு பொறித்தொகுதியை பொறுத்துவதற்காக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 8,083,216,612 தொகை செலவிடப்பட்டு செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டு காணப்பட்டது. கம்பனியின் முகாமைத்துவம் மற்றும் செயலாற்றல் அறிக்கையின் படி நவீனமயப்படுத்தல் செயற்திட்டத்தின் கீழ் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த அம்பேவெல தொழிற்சாலைக்கு 2018 மற்றும் 2019 ஆண்டுகளின் போது திரவப் பால் இயந்திரக் கொள்திறனில் 26 சதவீத்திற்கும் 25 சதவீதத்திற்கும் இடைப்பட்ட அளவு மாத்திரமே திரவப்பால் கிடைத்திருந்தது. தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும் படல்கம தொழிற்சாலை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் குறிப்பிட்ட தொழிற்சாலையின் இயந்திர கொள்திறனின் படி ஒரு நாளைக்கு கம்பனிக்கு 600,000 லீற்றர் திரவப்பால்

தேவையாக உள்ளதென அறிவித்திருந்த போதும் தற்போது நிறுவனத்திற்கு சேகரிக்கக் கூடியதாக உள்ள நாளாந்த திரவப்பாலின் எண்ணிக்கை 200,000 லீற்றர்கள் மாத்திரம் காணப்படுவதனால் இந்த இயந்திரத்தின் மொத்த கொள்திறன் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. அதன்படி இந்த இயந்திரத்திற்காக இலங்கை கணக்கீட்டு நியமம் 36 இன் படி சேதப்படுத்தல் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2013 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரையான நிதிக்கூற்றுக்களை பரிசோதனை செய்த போது தொழில்சாலையின் நவீனமயப்படுத்தல் செயற்திட்டம் மற்றும் படல்கம செயற்திட்டம் ஆகிய இரண்டு செயற்திட்டங்களினதும் கூட்டுத்தொகை என நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 15.1.3 இன் கீழ் இலங்கை அரச திறைசேரியில் இருந்து பெற்றிருந்த கடன் தொகை என ரூபா 15,781,118,709 தொகை காட்டப்பட்டிருந்த போதிலும் அட்டவணையின் படி தொழிற்சாலையை நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்திற்காக வழங்கியிருந்த கடன் மீதி ரூபா 6,632,493,444 தொகை மற்றும் படல்கம செயற்திட்டத்திற்காக வழங்கியிருந்த கடன் மீதி ரூபா 9,148,369,878 தொகை காணப்பட்டது. அதன்படி நிதிக்கூற்றுக்களின் மீதி இடையே இனங்காணப்படாத ரூபா 255,386 ற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. மேற்கூறிய மீதிகள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் மேலும் அவதானிக்கப்பட்டன.

(i) தொழிற்சாலை நவீனமயப்படுத்தல் செயற்திட்டம் தொடர்பாக கம்பனி மற்றும் திறைசேரியின் மீள்கடன் உடன்படிக்கையொன்று 2013 செப்தம்பர் 09 திகதி அணுகியிருந்தது. மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதியமைச்சின் நிதிக்கூற்றுக்களின் படி அச் செயற்திட்டத்தின் கீழ் கடன்மீதி (அந்தியச் செலாவணி முரண் தாக்கம் இன்றி) என ரூபா 2,185,414,618 தொகை மற்றும் நிதியமைச்சின் திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தின் அறிக்கைகளின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திறைசேரியினால் வங்கிக்கு செலுத்தியிருந்த போதிலும் கம்பனியினால் மீண்டும் திறைசேரிக்கு மீளளிப்பு செய்திருக்காத ரூபா 3,010,404,156 ற்கான கடன்மீதி ஒன்று மற்றும் அதன் மீது செலுத்த வேண்டியிருந்த ரூபா 544,357,013 ற்கான வட்டி மீதி ஒன்றும் காணப்பட்டது. அதன்படி கம்பனியினால் நிதிக்கூற்றுக்களில் நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் ரூபா 2,185,414,618 தொகை மற்றும் அத்திகதியில் உள்ளவாறு திறைசேரிக்கு மீளளிப்பு செய்ய வேண்டிய கடன் மீதி என ரூபா 3,010,404,156 தொகை என நடைமுறை பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட வேண்டியிருந்த போதிலும் கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் இந்த செயற்திட்டம் தொடர்பாக ரூபா 6,632,493,444 தொகை நீண்ட காலக் கடன் என காட்டப்பட்டிருந்த காரணத்தினால் கடன் மீதி ரூபா 1,436,674,670 தொகையினால் மிகையாக காட்டப்பட்டிருந்ததுடன், ரூபா 544,357,013 தொகைக்கான செலுத்த வேண்டிய வட்டியும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) மேற்கூறிய மீள்கடன் உடன்படிக்கையின் படி திறைசேரியினால் செலுத்தப்படும் கடன் தவணை மற்றும் வட்டி குறிப்பிட்ட காலத்தில் கம்பனியினால் திறைசேரிக்கு மீளளிப்பு செய்தல் புறக்கணித்தால் கம்பனியினால் திறைசேரிக்கு 2 சதவீதம் மேலதிக வட்டியொன்று செலுத்தப்பட வேண்டும். அதன்படி, 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திறைசேரிக்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 3,010.4 மில்லியன் தொகை கடன் தவணை மற்றும் ரூபா 544.36 மில்லியன் தொகை வட்டிக்காக 2013 ஆண்டு முதல் 2017 திசெம்பர் 31 திகதி வரை செலுத்த வேண்டியிருந்த 2 சதவீத வட்டி ஆகிய ரூபா 137.2 தொகைக்காக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) தொழிற்சாலையின் நவீனமயப்படுத்தல் செயற்திட்டத்திற்காக கம்பனி மற்றும் வெளிநாட்டு மூலவளத் திணைக்களத்துடன் மேற்கொள்ளப்பட்டிருந்த

உடன்படிக்கையின் பந்தி 2.04 இன் படி செயற்திட்டத்திற்காக வெளிநாட்டு மூலவள திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த அனைத்துச் செலவுகள் மற்றும் செலாவணி முரண்கள் கம்பனியினால் செலுத்த வேண்டும். அதன்படி மேற்கூறிய செயற்திட்டம் தொடர்பாக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த கடன் மீதி இலங்கை கணக்கீட்டு நியமம் 21 இன் 23 பந்தியின் பிரகாரம் வருட இறுதியில் காணப்படும் வெளிநாட்டுச் செலாவணி வீதாசாரத்தின் படி கணிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2013 முதல் 2017 வரை கணக்கீடு செய்யப்பட வேண்டிய ரூபா 753,021,056 தொகைக்கான வெளிநாட்டுச் செலாவணி விகிதாசார மூரண்களில் பிரதிகூலமாக தாக்கங்களை கணக்கீடு செய்யப்படாமையால் அப்பெறுமதிக்கு சமமான தொகையினால் கம்பனியின் பொறுப்புக்கள் குறைவாக கணிக்கப்பட்டு திரண்ட இலாபம் மிகையாக கணிக்கப்பட்டிருந்தது.

(iv) படல்கம செயற்திட்டத்திற்காக இலக்கம் அமப/15/0205/631/012 மற்றும் 2015 ஏப்ரல் 08 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி கம்பனி மற்றும் இலங்கை திறைசேரி மீள்கடன் உடன்படிக்கை ஒன்றிற்கு அணுகியிருக்க வேண்டியிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 திகதி வரை குறிப்பிட்ட உடன்படிக்கைக்கு அணுகியிருக்கவில்லை. நிதி அமைச்சின் வெளிநாட்டு மூலவள திணைக்களத்தின் 814 அறிக்கையின் படி 2017 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு இந்த செயற்திட்டத்திற்காக ஒப்பந்தக்காரருக்கு ரூபா 8,072,223,622 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களின் படி ரூபா 9,148,369,878 தொகைக்கான நீண்ட கால கடன்மீதி வெளிநாட்டு மூலவளத் திணைக்களத்தின் 814 அறிக்கையின் படி காட்டப்பட்டுள்ள கடன் மீதியை விட ரூபா 1,076,146,256 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டிருந்துடன், அத்திகதியில் உள்ளவாறு நிதியமைச்சின் நிதிக்கூற்றுக்களின் படி அச் செயற்திட்டத்தின் கீழ் செலுத்த வேண்டிய கடன் மீதி என ரூபா 7,842,369,066 தொகை காட்டப்பட்டிருந்தது.

(உ) 2011 ஜூன் 27 திகதி கம்பனியின் கேள்வி சபையின் மூலம் விலைகூறல் அழைக்கப்பட்டு 2012 ஜனவரி 31 திகதிய பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் படி தலைமை அலுவலகத்தினால் ரூபா 12,685,478 தொகை செலவிடப்பட்டு ஐஸ்கிரீம் இயந்திரம் ஒன்று 2013 ஜனவரி 17 திகதி கொள்வனவு செய்திருந்தது. குறிப்பிட்ட இயந்திரம் 2014 ஏப்ரல் மாதம் திகன பால் தொழில்சாலைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வியந்திரம் கணக்காய்வுத் திகதியாகிய 2019 திசெம்பர் 31 திகதி வரை பயன்படுத்தப்படாமல் இருந்த போதிலும் குறிப்பிட்ட இயந்திரத்திற்காக இலங்கை கணக்கீட்டு நியமம் 36 இன் படி சேதப்படுத்தல் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) இறுதி இருப்பு பெறுமதி மதிப்பீடு செய்தல் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் 09 அத்தியாயத்தின் படி கிரயம் அல்லது நிகர தேறிய பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதிக்கு பெறுமதி மதிப்பீடு செய்யாமல் பல்வேறு அடிப்படையில் 04 தொழிற்சாலைகளில், விலங்குணவு செயற்திட்டத்தின் மற்றும் பிரதான அலுவலகத்தின் இருப்பு மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகள் தயாரிக்கப்பட்டிருந்தது. அதன்படி அந்த கணக்கை ஒன்றினைத்து தயாரிக்கப்பட்டிருந்த ஒன்றித்த கணக்கின் இறுதியிருப்பு கணக்காய்வினால் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட தெரிவின் படி ரூபா 133,273,441 தொகையினால் குறைவாக காட்டப்பட்டிருந்த தென அவதானிக்கப்பட்டமையால் ஒன்றித்த இறுதி நிதிக்கூற்றுக்களில் இலாபம் அந்தத் தொகையால் மிகையாக காட்டப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

(v) நிதிக்கூற்றுக்களின் படி 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பணிப்பாளர் சபைக்கு வழங்கியிருந்த ரூபா 4,699,558 தொகைக்கான முற்பணங்கள் 05 வருடங்கள் முதல் 10 வரை காலம் கடந்திருந்த போதும் குறிப்பிட்ட முற்பணங்கள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டிருந்ததுடன், அட்டவணையின் படி அம்மீதி ரூபா 4,661,019 தொகையாக காட்டப்பட்டமையால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த மீதி மற்றும் அட்டவணையில் காட்டப்பட்டிருந்த மீதியிடையே ரூபா

38,539 ற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. அதேபோல் முற்பண மீதி தொடர்பாக தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன், இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 24 இன் படி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஏ) பின்வரும் விடயங்கள் தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றை கணக்காய்வில் திருப்திகரமான சான்றுறுதி செய்வதற்கு அல்லது மெய்மையாய்வதற்கு முடியாதிருந்தது.

(i) ரூபா 3,407,812 தொகைக்கான அவ்வப்போது கொடுக்கல் வாங்கல் தொடர்பான உறுதிச் சீட்டுக்களும் பற்றுச்சீட்டுக்களும் மற்றும் ரூபா 4,676,233 ற்கான முற்பணங்(Milk can)களுக்கான ஒப்படைத்தல் பத்திரம்.

(ii) ரூபா 3,099,816 தொகைக்காக வர்த்தக கடன்பட்டோர் தொடர்பான விரிவான அட்டவணைகள், காலப்பகுப்பாய்வு, விற்பனவு இன்வொயிஸ், ஒப்படைத்தல் பத்திரம் மற்றும் ரூபா 1,458,589 தொகைக்கான பலவினக் கடன்பட்டோர் தொடர்பான விற்பனவு இன்வொயிஸ் மற்றும் ஒப்படைத்தல் பத்திரம்.

(iii) ரூபா 4,228,888 தொகைக்கான பிணை வைப்புக்கள் உரிய பிணை வைப்புச் சான்றிதழ்கள் மற்றும் ரூபா 1,603,212 தொகைக்கான இலங்கை மின்சார சபையின் பாதுகாப்பு வைப்புக்கள் தொடர்பான பற்றுச்சீட்டுக்கள் மற்றும் பிணைச் சான்றிதழ்கள்.

(iv) ரூபா 5,695,377 தொகைக்கான கடன்கொடுத்தோர் தொடர்பான இன்வொயிஸ் மற்றும் பண்டங்கள் பெறல் பத்திரம் மற்றும் ரூபா 3,940,651 தொகைக்கான துணைக் கட்டுநிதிகள் தொடர்பான விரிவான அட்டவணைகள்.

(v) ரூபா 6,809,759 தொகைக்கான அரச நிறுவனங்களில் இருந்து பெறவேண்டிய மீதிகளுக்கான மீதி உறுதிப்படுத்தல்கள்.

(vi) நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 314,423,452 தொகைக்கான அட்டுருச் செலவுகள் தொடர்பான காலப் பகுப்பாய்வு மற்றும் விரிவான அட்டவணைகள்.

(ஐ) 2016 மே 07 திகதி முதல் பொலன்னறுவ தொழிற்சாலை கலஞ்சியத்தில் பொதி செய்யப்பட்டிருந்த பயன்படுத்தப்படாத அம்பேவெல தொழிற்சாலைக்கு சொந்தமான ரூபா 15,699,277 தொகை பெறுமதியான பால் மா பொதிகள் (metalized polyandry) 17,750 கிலோகிராம்கள் மற்றும் 31,000 உர பைகள் காலவதியான இருப்பு என சீராக்கல் மேற்கொள்ளப்படாமல் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இருப்புடன் கூட்டப்பட்டு கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.

(ஒ) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 3,164,057 தொகைக்கான பயன்படுத்தப்படாத பொதி செய்யும் பொருட்களின் இருப்பு நிதிக்கூற்றுக்களில் சீராக்கல் செய்யப்படாமையால் தேறிய இலாபம் அத்தொகையினால் மிகை கணிப்பு ஏற்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

(ஓ) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 231,428,134 தொகைக்கான கடன் கொடுத்தோர் மீதியில் ரூபா 199,658,396 தொகைக்கான 48 கடன்கொடுத்தோருக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தன. அவற்றில் கடன்கொடுத்தோர் 39 போர் மீதிகளை உறுதிப்படுத்தல்கள் அனுப்பியிருக்கவில்லை. மீதிகளை உறுதிப்படுத்தியிருந்த 09 பேர்களில் 03 கடன்கொடுத்தோரின் மீதிகள் அந்த அட்டவணையில் காட்டப்பட்டிருந்த மீதிகளுடன் இணங்கியிருக்காததுடன், மீதிகளை உறுதிப்படுத்தல்களின் படி வியாபாரக் கடன்கொடுத்தோர் கணக்கின் மீதி ரூபா 17,368,327 இனால் அதிகரிக்க வேண்டியிருந்ததென அவதானிக்கப்பட்ட போதிலும் வித்தியாசத்திற்கான காரணம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) 2007 முதல் 2011 ஆண்டு வரை செயற்திட்டம் ஒன்று செயற்படுத்துவதற்காக அரச சார்ப்பற்ற நிறுவனம் ஒன்றிலிருந்து கிடைத்திருந்த ரூபா 18,048,474 தொகையில் ரூபா 1,497,000 தொகை காசாக கொடுப்பனவு ஒன்று மற்றும் நாட்குறிப்பு மூலம் ரூபா 4,545,630 ற்கான மீதியொன்று வரவு மற்றும் செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும், மேற்கூறிய பணம் பெறுவனவு மற்றும் கொடுப்பனவு மற்றும் நாட்குறிப்புக்கள் தொடர்பான சான்றுகள் மற்றும் அட்டவணைகள் ஏதும் சமர்ப்பிக்க முடியாது என கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(க) தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து ரூபா 2,979,204 தொகை பெறுமதியான கால்நடை உணவு கொள்வனவு செய்து பாலுக்கான கொடுப்பனவு செய்யும் போது மீண்டும் அறவீடு செய்யும் அடிப்படையில் அந்த உணவுகள் பால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்தது. கால்நடை உணவு பால் விவசாயிகளுக்கு வழங்குதல் மற்றும் அதற்கான பெறுமதியை விவசாயிகளிடம் இருந்து மீண்டும் அறவீடு செய்தல் தொடர்பாக கணக்குகள் பேணப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக விவசாயிகளிடம் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த பணம் அறவீடு செய்யப்பட்டமையை உறுதிப்படுத்தப்படாததுடன், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் கால்நடை உணவு கொள்வனவு செய்த மொத்தப் பெறுமதியும் மேற்கூறிய தனியார் நிறுவனத்தின் பெயரிற்கு ஏனைய கடன்கொடுத்தோர் மீதியின் கீழ் வரவு மீதி ஒன்று என பிழையாக காட்டப்பட்டிருந்தமையால் கடன்கொடுத்தோரும் பிழையாக காட்டப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் அபிப்பிராயத்தை மறுப்பதற்கான அடிப்படை பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்கள் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயம் ஒன்றிற்கான அடிப்படை ஒன்றை வழங்குவதற்கு போதியளவு மற்றும் பொறுத்தமான கணக்காய்வுச் சான்றுகள் பெற்றுக்கொள்வதற்கு எனக்கு முடியாமல் உள்ளது. அதன் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் ஒன்று தெரிவிக்க முடியாதுள்ளது.

### 2.1.1 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பான அறிக்கைகள்

2007 இன் 07 இலக்கம் கம்பனிச் சட்டத்தின் பிரிவு 163(2) இன் மூலம் விதிக்கப்பட்டுள்ளவாறு பின்வரும் விடயங்களை வெளியிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படை, விடயப் பரப்பு மற்றும் கணக்காய்வின் வரையறைகள் மேலே கூறப்பட்டவாறாகும்.

(ஆ) கணக்காய்விற்கு தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் விளக்கமளித்தல்களும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதெனவும், எனது பரிசோதனையின் மூலம் காணக்கூடிய முறையில் கம்பனியினால் முறையான கணக்கீட்டு அறிக்கைகள் பேணப்பட்டு வந்திருக்கவில்லை எனவும்,

கம்பனி நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 07 இலக்க கம்பனிச் சட்டத்தின் பிரிவு 151 இல் காட்டப்பட்டுள்ள தேவைகளுடன் இணங்கியுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.2 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2003 ஜுன் 02 திகதிய பீஈடீ/12 இலக்கங் கொண்ட பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரிவு 6.5.1 பிரகாரம் கணக்கு ஆண்டு முடியவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2017 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 ஜனவரி 06 திகதியே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. வரைவு வருடாந்த அறிக்கை 2020 மே 15 திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3 நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் நிதி விளைவுகள் ரூபா 434,933,130 தொகை பற்றாக்குறை ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 339,331,549 தொகையாக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 774,264,679 ற்கான பின்னடைவொன்று காணப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மொத்த இலாபம் ரூபா 490,902,443 தொகையினால் குறைவடைதல் மற்றும் நிருவாக, விநியோக மற்றும் ஏனைய செலவுகள் ரூபா 340,730,771 இனால் அதிகரித்திருத்தல் மேற்கூறிய பின்னடைவிற்கு முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தல் செயற்திட்டம் மற்றும் படல்கம செயற்திட்டத்திற்கான பெற்றிருந்த கடன் காரணத்தினால் கம்பனியின் அலைவு விகித 2012 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரை 0.64 முதல் 10.12 வரை அதிகரித்திருந்தது.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 ஜூன் 02 திகதிய பீஈடீ/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 5.1.2 பிரகாரம் தற்போது நிறுவனத்திற்கு சொந்தமாக காணப்படும் தொழில்நுட்ப அறிவு, சந்தைகள் மற்றும் வழங்குனர்கள், அமைப்பு கட்டமைப்பு மற்றும் திட்டமிடப்பட்ட கால வரையறையுள் நிறைவேற்றப்பட வேண்டிய இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்புக்களை காட்டும் செயல் நடவடிக்கைத் திட்டம் கூட்டிணைந்த திட்டத்தில் உட்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், 2015 – 2017 வரையான கூட்டிணைந்த ஒன்றித்த திட்டத்தில் அவை உட்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான வருடாந்த பாதீட்டில் மூலதனச் செலவுகள் மாத்திரம் உட்படுத்தப்பட்டிருந்ததுடன் பாதிடப்பட்ட செயற்பாட்டுச் செலவுகள் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது கம்பனியினால் மூலதனச் சொத்துக்கள் கொள்வனவு செய்தல் மற்றும் மூலதனச் சொத்துக்கள் திருத்த வேலை மேற்கொள்வதற்காக முறையே ரூபா 660.42 மில்லியன் தொகை மற்றும் ரூபா 207.95 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பந்தி 4.2 இன் பிரகாரம் பிரதான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 4.1.2 செயற்பாடுகள் மற்றும் மீளாய்வு

2015 ஆண்டிற்கு ஒப்பாக 2016 ஆண்டில் கிருமி நீக்கப்பட்ட பால் உற்பத்தி 47 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் 2016 ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது அது 36 சதவீதத்தினால் குறைந்திருந்தது. அதேபோல் 2015 ஆண்டிற்கு ஒப்பாக 2016 ஆண்டின் போது பாட்கட்டி உற்பத்தி 59 சதவீதத்தினால் மற்றும் மீளாய்வாண்டின் போது 29 சதவீதத்தினால் குறைந்திருந்தது. 2015 ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது வெண்ணெய் உற்பத்தி 32 சதவீதத்தினால் மற்றும் பால்மா உற்பத்தி 69 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) **அம்பேவலை தொழிற்சாலை**

அம்பேவெல தொழிற்சாலையில் 2017 திசெம்பர் 26 முதல் 30 வரை மேற்கொள்ளப்பட்ட இருப்பு கணிப்பீட்டின் படி வர்த்தகப் பெறுமதி ரூபா 13 மில்லியனிற்கான பால்மா இருப்புக்களுக்கு சேதம் ஏற்பட்டிருந்திருந்தது என அவதானிக்கப்பட்டதுடன் அது தொடர்பான விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

(i) பால்மா கலஞ்சியப்படுத்தப்பட்டிருந்த பிரதான கலஞ்சியத்தின் கூரையின் ஓட்டையின் ஊடாக மழை நீர் கசிவு ஏற்பட்டு கலஞ்சியத்தில் சுமார் 3 அங்குல உயரத்திற்கு நீர் நிரம்பியிருந்ததுடன், 25 கிலோகிராம் வீதம் பொதி செய்யப்பட்டிருந்த அதாவது வர்த்தகப் பெறுமதி ரூபா 3 மில்லியனிற்கான 4,450 கிலோகிராம் பால்மா அடங்கிய 178 கொள்கலன்கள் ஓட்டை ஏற்பட்டு பால்மா வெளியேறி இருந்ததுடன், மழைக்கு நனைதல், பொதிகள் வெடிப்படைந்திருத்தல், பெலட்களில் நெருங்கி களங்கப்படுத்தப்பட்டிருத்தல் போன்ற பல்வேறு சேதங்களுக்கு ஆளாக்கப்பட்டிருந்தது.

(ii) கலஞ்சியத்தில் பால்மா இருப்பு முறைப்பிரகாரம் அதாவது குறியீட்டு இலக்கங்களின் படி, தொகுதி இலக்கங்களின் படி, காலவதியாகும் திகதிகளின் படி பாதுகாப்பாக கலஞ்சியப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், இருப்புக்கள் வழங்கும் போது கலஞ்சியத்திற்கு முதலில் கிடைத்த இருப்பு முதலில் வழங்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், இருப்புக்களுக்காக இலகுவாக நெருங்க முடியுமானவாறு கலஞ்சியம் பேணப்படாதிருத்தல் அதற்காக காரணமாக இருந்தது. 2018 பெப்ரவரி 01 திகதியில் உள்ளவாறு காலவதியாவதற்கு நெருங்கியிருந்த வர்த்தகப் பெறுமதி ரூபா 2.6 மில்லியன் தொகைக்கான 3,900 கிலோகிராம் பால்மா மற்றும் காலவதியாகி மிருக உணவிற்காக வகைப்படுத்தப்பட்டிருந்த 10,750 கிலோகிராம் பால்மாக காணப்பட்டதுடன், அவற்றின் வர்த்தக பெறுமதி ரூபா 7.4 மில்லியன் தொகையாக இருந்தது.

(ஆ) **பொலன்னறுவை தொழிற்சாலை**

(i) டீசல் இருப்பு பௌதீக ரீதியாக மெய்மை ஆய்வு மேற்கொள்ளப்படாமல் இருப்புப் பதிவேடுகளுக்கு உட்படுத்தப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

(ii) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இரசாயன இருப்புப் பெறுமதி ரூபா 174,420 ற்காக பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், 2007 முதல் 2017 வரையான காலவீச்சில் காலவதியாகி மற்றும் தற்போது பயன்படுத்தப்படாத 26 வகையான இரசாயனப் பொருட்களும் அடங்கியிருந்ததுடன், அனேகமான இரசாயன பொருட்களின் உட்பத்தித் திகதியில் மற்றும் காலவதியாகும் திகதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. மேலும், பயன்படுத்த முடியாத, ரூபா 3,164,057 தொகைக்கான பொதி செய்யும் பொருட்கள் இருப்பு 05 வகையானவைகளும் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இருப்பில் அடங்கியிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(iii) பொலன்னறுவை பால் தொழிற்சாலை அமைந்துள்ள 12 ஏக்கர் காணியும், ஊழியர் உத்தியோகபூர்வ வாசஸ்தளங்கள், விளையாட்டுத் திடல், பால் நிலையங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகளுடனான மேலும் 37 ஏக்கர் அளவான இரண்டு காணிகளும் காணப்பட்ட போதிலும், 2019 ஆண்டு இறுதியளவில் அந்த காணிகளின் காணி உறுதிகள் மற்றும் நில அளவை வரைபடங்கள் கம்பனியின் பெயரில் காணப்படவில்லை. அவற்றில் ஒரு காணியில நிர்மாணிக்கப்பட்டிருந்த பால் நிலையம், விளையாட்டு சன சமூக மண்டபம் மற்றும் மாட்டுப் பண்ணை

என்பன தற்போது பயன்படுத்தப்படுவதில்லை எனவும், அந்தக் காணியில் 15 ஏக்கரை விட கூடிய அளவு மிகையான காணி எதுவித பயிர்ச் செய்கைக்கு அல்லது நிர்மாண வேலைக்கு பயன்படுத்தப்படாமல விளைவற்று காணப்பட்டது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**4.3 செற்பாட்டுத் திறமையின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பால் சேகரிக்கும் போது தொழில்சாலைக்கு கிடைக்கும் பால் எண்ணிக்கையை விட மிகையான பால் லீற்றர் தொகையொன்றிற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமையால் மில்கோ நிறுவனம் 2017 ஆண்டின் போது ரூபா 73,343,796 தொகையொன்று மிகையாக செலுத்தியிருந்தது. பால் சேகரிப்பு நிலையங்கள் முறையான மேற்பார்வை ஒன்றின் கீழ் செயற்படுத்தப்படாமை மற்றும் தலைமை அலுவலகத்திற்கு தரவுகள் செலுத்துகை மேற்கொண்டு சுயமாக செயற்படும் மேற்பார்வை ஒன்று மேற்கொள்ளக்கூடியவாறு தொழிற்சாலையை நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் புதிய பால் சேகரிப்பு நிலையம் நிர்மாணிக்கப்படாமை இந்த நிலைமைக்கு முக்கியமான காரணமாக இருந்தது.

(ஆ) 2017 ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கையின் படி, அம்பேவெல தொழிற்சாலையில் ரூபா 124,587,211 தொகை பெறுமதியான 1,813,226 லீற்றர் பால் வழமையல்லாத இருப்பு சேதம் ஒன்று மற்றும் 2017 ஜுலை வரை 2 சதவீத பொதுவான விரயம் 2017 ஆகஸ்ட் அளவில் 4 சதவீதம் வரை அதிகரித்திருந்தது என அவதானிக்கப்பட்டது.

(இ) 2016 ஆண்டிற்கு முன்னர் உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டு நேரடியாக இலங்கை இராணுவத்தின் 08 இராணுவ முகாம்களுக்காக UHT பால் பக்கற்றுக்கள் பொலன்னறுவை தொழிற்சாலையில் இருந்து விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும் 2016 ஆண்டின் பின்னர் இலங்கை இராணுவத்திற்கு நேரடியாக விற்பனை செய்வதற்கு பதிலாக கம்பனியின் முகவர் இருவர் மூலமாக விற்பனை செய்யப்பட்ட காரணத்தினால் 2016, 2017 மற்றும் 2018 ஆண்டுகளின் போது கம்பனிக்கு முறையே ரூபா 11,172,336 , ரூபா 19,768,291 இற்கான மற்றும் ரூபா 17,485,394 தொகைக்கான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஈ) கம்பனியினால் முகவர் ஒருவருக்கு வழங்கப்படும் உச்ச மட்ட கடன் காலம் 50 நாட்கள் எனினும், இலங்கை இராணுவத்திற்கு வழங்கல் மேற்கொண்ட முகவர்கள் இருவருக்கும் 2017 மற்றும் 2018 ஆண்டுகளின் போது முறையே ரூபா 14,298,178 தொகை மற்றும் ரூபா 24,595,873 தொகைக்கான வழங்களுக்காக 40 நாட்கள் முதல் 180 நாட்கள் வரையான கடன் கால எல்லை வழங்கியிருந்தது என அவதானிக்கப்பட்டன.

(உ) அங்கீகரிக்கப்பட்ட கடன் கால வரையறையை மிகைத்திருந்த போதிலும் மேற்கூறிய இரண்டு முகவர்களில் ஒருவருக்கு 2017 மற்றும் 2018 ஆண்டுகளின் போது கம்பனியினால் பெற்றிருந்த வங்கி பிணை முறியின் பெறுமதியை மிகைத்து உற்பத்திப் பொருட்கள் கடனிற்கு விற்னை செய்யப்பட்டிருந்ததுடன், அதன்படி பொலன்னறுவை தொழிற்சாலை மூலம் மேற்கொள்ளப்பட்ட பால் பைக்கட் விற்பனை தொடர்பாக 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் வங்கிப் பிணை முறிகளின் பெறுமதி ரூபா 30 மில்லியனை மிகைத்து முறையே ரூபா 10.6 மில்லியன் தொகை மற்றும் ரூபா 49.7 மில்லியன் விற்பனவு அவருக்கு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி கணக்காய்வுத் திகதியாகிய 2019 ஜனவரி 21 திகதியளவிலும் 2018 ஆண்டிற்கான ரூபா 34 மில்லியன் தொகை கம்பனிக்கு நிலுவையாக காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

(ஊ) 01 வருடத்திற்கு குறைவான ரூபா 4,954,294 தொகையும், 1 – 3 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 316,750 தொகையும், 3 – 5 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 252,117 தொகையும் 5 – 10 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 646,030 தொகை மற்றும் 10 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 22,000 தொகைக்கான பெறவேண்டிய முற்பணங்கள் அவதானிக்கப்பட்டன.

(vi) வெளி நிறுவனங்கள் மற்றும் வெளி நபர்கள் 49 பேருக்கு வழங்கப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 26,237,597 தொகைக்கான முற்பண மீதிகள் 2017 திசெம்பர் 31 திகதி வரை தீர்க்கப்படாமல் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. அந்த மீதியின் காலப் பகுப்பாய்வின் படி 1 வருடத்திற்கு குறைவான ரூபா 4,564,820 தொகையும் 1 – 3 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 4,634,510 தொகையும், 3 – 5 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 12,380,39 தொகையும், 5 – 10 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 4,517,543 தொகையும் 10 வருடங்களை மிகையான ரூபா 140,285 தொகையும் காணப்பட்டது.

(ஏ) 2017 ஏப்ரல் 06 திகதி பெலவத்த தனியார் கம்பனியுடன் மில்கோ நிறுவனம் மேற்கொண்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் பால் வழங்கப்பட்ட நாளில் இருந்து 15 நாட்களுக்குள் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 122,646,142 ற்கான மீதியில் ரூபா 41,841,560 தொகை 2 வருடங்களுக்கு மிகையானது மற்றும் ரூபா 80,804,581 தொகை 4 மாதங்கள் முதல் 1 வருடத்திற்கு இடைப்பட்ட காலப்பகுதி முதல் காணப்படுவதுடன் மேற்கூறிய மீதியில் 2019 செப்டம்பர் 30 திகதி அளவில் அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 58,065,577 தொகை காணப்பட்டது. அதன்படி உடன்படிக்கையின் பிரகாரம் அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஐ) நிறுவனத்தின் படல்கம செயற்திட்டத்திற்காக ஒப்பந்தக்காரரினால் இறக்குமதி செய்யப்பட்ட உபகரணங்களை துறைமுகத்திலிருந்து விடுவிப்பதற்காக கம்பனியின் கோரிக்கையின் மீது உரிய சுங்கவரியை குறிப்பிட்ட தினத்தில் செலுத்துதல் உரிய அமைச்சின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த சுங்கவரி குறிப்பிட்ட தினத்தில் செலுத்தப்படாத காரணத்தினால் 2017 ஆண்டின் போது ரூபா 6,439,218 ற்கான மேலதிக கிரயம் ஒன்று தாமதக் கட்டணமாக மேற்கொள்வதற்கு நேரிட்டிருந்ததெனவும், கம்பனியின் நட்டம் அத் தொகையினால் அதிகரித்திருந்ததென அவதானிக்கப்பட்டது.

(ஒ) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அவ்வப்போது கொடுப்பனவுகள் ரூபா 2,902,622 தொகை ஒன்று காணப்பட்டதுடன் அந்த மீதியில் ரூபா 1,996,420 தொகை 3 வருடங்களுக்கும் 5 வருடங்களுக்கும் இடைப்பட்டதாக காணப்பட்டதுடன், ரூபா 1,086,636 தொகை 5 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடைப்பட்ட தொகை என அவதானிக்கப்பட்டது.

### 4.4 பதவியணி நிருவாகம்

(அ) முகாமைத்துவ சேவை சுற்றிக்கை இலக்கம் 30 இன் பிரகாரம் பதவியணி ஆட்சேர்ப்பு நடைமுறை ஒன்று 2018 ஒக்தோபர் 25 திகதி வரை அங்கீகரிக்கப்பட்டிருக்காததுடன், 2008 நவம்பர் 07 திகதி முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணியினர் 1,420 தொகை எனினும், உள்ளவாறான பதவியணி 1,471 தொகையாக காணப்பட்டது. இந்த உள்ளவாறான பதவியணியில் நிறைவேற்றுத்தரம் 45 மற்றும் ஆரம்ப மட்டத்தின் 352 ற்கான வெற்றிடங்கள் மற்றும் இரண்டாம் மற்றும் ஆரம்ப மட்டத்தின் ஊழியர்களில் 363 இற்கான மிகை ஒன்று காணப்பட்டதுடன் ஒட்டுமொத்தமாக 51 ஊழியர் மிகை காணப்பட்டது.

(ஆ) மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் 9.14.1 இன் பிரகாரம், கம்பனியினால் மனித வள முகாமைத்துவம் தொடர்பாக, பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மற்றும் திறைசேரி செயலாளரின் இணக்கத்துடன் கையேடு ஒன்று தயாரித்திருக்காததுடன் வார இறுதி விடுமுறை நாட்களில் கடமையாற்றுவதற்காக நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கு 1/20 படிக்கு மேலதிகமாக பதில் விடுமுறையும், ஏனைய உத்தியோகத்தர்களுக்கு (நிறைவேற்று அல்லாத) மேலதிக நேரப்படிக்கு மேலதிகமாக பதில் விடுமுறையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(இ) 2015 ஜுலை 14 திகதிய பொது நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 03/2015 பிரகாரம் நிமித்தக் கட்டுநிதி வழங்க முடியுமான உச்சமட்ட பெறுமதி ரூபா 100,000 வரையறுக்கப்பட்டிருந்ததுடன், அந்த வரையறையை மிகைத்து கட்டுநிதி வழங்கப்படும் எனின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் திறைசேரியின் பூர்வாங்க அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டும். அதன்படி தலைவரினால் ஒரு சந்தர்ப்பத்தில் ரூபா 314,160 தொகை பெறுமதி மற்றும் உப தலைவரினால் ஒரு சந்தர்ப்பத்தில் ரூபா 1,000,000 தொகை நிமித்தக் கட்டுநிதி மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளரினால் 10 சந்தர்ப்பங்களில் ரூபா 115,000 முதல் ரூபா 619,016 தொகை வரை வீச்சில் கூட்டுத்தொகை ரூபா 2,739,303 தொகைக்கான நிமித்தக் கட்டுநிதி அங்கீகாரம் இன்றி வழங்கியிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2015 ஜுன் 17 திகதிய மற்றும் திரைசேறி செயலாளரினால் வழங்கப்பட்டிருந்த பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் PED 3/2015 சுற்றறிக்கையின் 2.8 பந்தியின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள படிகள் தவிர ஏனைய அரசுக்கு உரிமையுள்ள வர்த்தக முயற்சிகளின் தலைவர்கள், நிறைவேற்று மற்றும் நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்களுக்கு படி ஒன்று செலுத்துதவற்காக வரிசை அமைச்சுச் செயலாளரின் பரிந்துரையின் மீது மற்றும் நிதி அமைச்சரின் இணக்கத்துடனாகும் எனினும், அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் வீட்டு வாடகை கொடுப்பனவு என தலைவருக்கு ரூபா 45,000 தொகை மற்றும் உப தலைவர் மற்றும் தொழிற்படு பணிப்பாளருக்கு ரூபா 35,000 தொகை வீதம் மாதாந்தப் படியொன்று 2007 முதல் 2019 திசெம்பர் வரை செலுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

## 5 நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நெருங்குதல்

ஐக்கிய நாடுகள் அமைப்பினால் 2030 அளவில் தனது அமைப்புக்குச் சொந்தமான அனைத்து நாடுகளின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு வழங்குவதை அடிப்படையாகக் கொண்டு நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் அறிமுகப்படுத்தியிருந்த போதிலும் அதற்குப் பொருந்தக் கூடிய விதமாக கம்பனியின் இலக்குகள் மற்றும் குறிகாட்டிகளை இனங்கண்டிருக்காததுடன் சரியான தரவுகளை பெற்றுக் கொள்வதில் மற்றும் பௌதீக வழங்களை முகாமைத்துவம் செய்வதில் செய்முறைகளும் இனங்கண்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தும் செயற்திட்டம்**

(i) வெளிநாட்டு நிறுவனம் ஒன்றாகிய டெஸ்மி நிறுவனத்தினால் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சுக்கு அனுப்பியிருந்த 4 தொழிற்சாலைகளை நவீன மயப்படுத்தல், 80 பால் சேகரிப்பு நிலையங்களை திருத்துதல் மற்றும் 20 புதிய நிலையங்கள் நிர்மாணிக்கும் செயற்திட்டம் தொடர்பான முன்மொழிவு, அமைச்சரவையினால் நியமனம் செய்திருந்த தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழு மூலம் மதிப்பாய்வு செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த அறிக்கையின் படி 2009 திசெம்பர் 31 திகதி 39.1 யூரோ மில்லியன் தொகைக்கு கம்பனி மற்றும் மேற்கூறிய நிறுவனம் இடையே ஒப்பந்த உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருந்தது. எனினும் 2011 ஜுன் 24 திகதி கம்பனியின் தலைவரினால் அந்தத் நிறுவனத்திற்கு கடிதம் ஒன்று அனுப்பி 2.37 யூரோ மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த 80 பால் சேகரிப்பு நிலையங்களின் திருத்த வேலைகள் மற்றும் 20 நிலையங்களின் நிர்மாண வேலைகள் அகற்றப்பட்டு ரூபா

33.78 மில்லியன் தொகைக்கு புதிய பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டு 2012 ஜனவரி 12 திகதி மீண்டும் புதிய உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழு ஆரம்பத்தில் செயற்திட்டம் மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது (இயந்திரங்களின் உச்ச மட்ட கொள்திறனை பயன்படுத்தப்படும் என்ற அடிப்படையிலே) என்ற காரணத்தினால் மற்றும் அதற்காக பால் சேகரிப்பு நிலையங்களின் திருத்த வேலைகள் மேற்கொள்ளல் மற்றும் புதிய நிலையங்கள் நிர்மாணிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் புதிய ஒப்பந்த உடன்படிக்கையின் மூலம் அவ் விடயங்கள் அகற்றப்படல் மற்றும் மாற்று முறைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால் செயற்திட்டத்தின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக பிரதிகூல தாக்கம் ஏற்படக் கூடியதாக உள்ளதென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ii) பொலன்னறுவை, திகன மற்றும் அம்பேவல ஆகிய தொழிற்சாலைகளின் நவீன மயப்படுத்தும் செயற்திட்டங்களுக்காக கூறுவிலைகள் அழைக்கப்படாமல் டர்ன் கீ (Turnkey) முறையில் தெரிவு செய்யப்பட்டிருந்த வெளிநாட்டு ஒப்பந்த நிறுவனம் மற்றும் மில்கோ தனியார் கம்பனி இடையே ரூபா 5,854,450,856 தொகை அதாவது யூரோ 33,779,210 இற்கான ஒப்பந்தப் பெறுமதி தொடர்பாக உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் படி செயற்திட்டத்தின் ஒப்பந்தக் காலம் 2014 ஜூலை 12 திகதி முடிவடைய வேண்டியிருந்த போதிலும் திகன மற்றும் அம்பேவல பாற் தொழிற்சாலையின் நவீன மயப்படுத்தும் அலுவல்கள் 2017 ஜூலை 31 திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் 2017 ஜூலை மாதம் அளவில் இணக்கத்தின் படி தாமதக் கட்டணமாக அறவிடப்பட வேண்டியிருந்த யூரோ 1,688,961 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) **படல்கம செயற்திட்டம்**
------------------------------

HSBC வங்கி மற்றும் திறைசேரியின் வெளிநாட்டு மூலவளத் திணைக்களத்தின் இடையே மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் 1.90 சதவீத வர்த்தக அல்லாத மற்றும் 5 சதவீத + LIBOR வர்த்தக கடன் வட்டி விகிதத்தின் மீது உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 9,932,709,286 இற்கான கடன் தொகையின் கீழ் கம்பனிக்கு சொந்தமான நாரஹேன்பிட தொழிற்சாலையை படல்கம இற்கு எடுத்துச் செல்லும் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2015 மார்ச் 04 திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் படி

- கடன் தொகையை திருப்பிச் செலுத்துவதற்கு மில்கோ கம்பனிக்கு இயலுமை காணப்படாமை.
- அரச கொள்கையின் படி பாலின் விலை அதிகரித்தலுக்கு ஒப்பாக பால் உற்பத்தி பொருட்களின் விலை அதிகரிக்கப்படாமையால் காசுப் பாய்ச்சலின் குறைவு ஒன்று ஏற்பட்டிருந்த காரணத்தினால் கம்பனி தீவிர நிதி நெருக்கடி ஒன்றில் காணப்படுகின்றதெனவும், தொடர்ந்தும் கடன் தொகையொன்று பெறுவதன் மூலம் அந்த நிதி நெருக்கடி உக்கிரமடையும்.
- திட்டமிடப்பட்ட தொழிற்சாலையை நவீனமயப்படுத்தல் மூலம் உற்பத்திக்காக சுமார் நாளாந்தம் சுமார் 600,000 லீற்றர் பால் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்ததுடன் இந்த தொழிற்சாலை நிறுவப்பட்டால் பால் பெற்றுக் கொள்வதில் பாரிய நெருக்கடி ஒன்றிற்கு முகங்கொடுக்க நேரிடும்.

ஆகிய விடயங்களின் காரணமாக செயற்திட்டத்தை நிராகரிப்பதற்கு 2015 மார்ச் 07 திகதி அமைச்சரவையினால் தீர்மானித்திருந்தது. எனினும் 2015 ஏப்ரல் 08 திகதி குறிப்பிட்ட கடன்தொகைக்காக மூன்று வருட சலுகைக் காலம் மற்றும் மில்கோ கம்பனிக்கு மீள்கடன் தொகையொன்று வழங்கும் அடிப்படையில் மீண்டும் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு 2015 ஏப்ரல் 23 திகதி செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக

அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2018 ஒக்தோபர் 19 திகதி வரை கம்பனி மற்றும் திறைசேரி மீள்கடன் உடன்படிக்கை ஒன்றிற்கு அணுகியிருக்கவில்லை.

(ii) 2013 ஜுன் 05 திகதிய அமைச்சின் மதிப்பாய்வுக் குழுவினால் மேற் கூறிய செயற்திட்டத்திற்காக கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த டெஸ்மி கன்ஸ்டக்டின் ஏஜன்சீஸ் மற்றும் பொக்காட் புட் பர்மா நிறுவனம் மதிப்பாய்வு செய்யப்பட்டு மிகவும் அனுகூலமான நிறுவனம் என பொக்காட் புட் பர்மா நிறுவனம் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. எனினும் 2015 ஏப்ரல் 23 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி செயற்திட்டத்திற்காக standalone மற்றும் Unsolicited முன்மொழிவு ஒன்றாக காட்டப்பட்டு விலைகூறல் அழைக்கப்படாமல் மற்றும் டர்ன் கீ (Turnkey) அடிப்படையின் கீழ் டெஸ்மி கன்ஸ்டக்டின் ஏஜன்சீஸ் இற்கு ஒப்பந்த வேலையை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டு 2015 மே 19 திகதி அக் கம்பனியுடன் ஒப்பந்த உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- 2013 ஜுன் 05 திகதிய அமைச்சின் மதிப்பாய்வுக் குழுவின் பிரேரணையின் படி டெஸ்மி கன்ஸ்டக்டின் ஏஜன்சீஸ் நிறுவனத்தின் விலைகள் பொக்காட் புட் பர்மா நிறுவத்தை விட 10 யூரோ மில்லியன் அதாவது ரூபா 1,750 மில்லியன் இற்கான அதிகரிப்பு ஒன்று காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

- மேற்கூறிய செயற்திட்டம் தொடர்பாக 2014 ஆகஸ்ட் 20 திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த அமைச்சரவையினால் நியமனம் செய்யப்பட்ட குழுவின் அறிக்கையின் படி டெஸ்மி கன்ஸ்டக்டின் ஏஜன்சீஸ் கம்பனியினால் மேற் கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த நிர்மாண வேலைகளின் பெறுமதி 4,000,000 யூரோ எனப்படும் சுமார் ரூபா 596,952,800 தொகை நியாயமான பெறுமதியை விட கூடிய பெறுமதி ஒன்றினை காட்டுகின்றதென காட்டப்பட்டிருந்தது.

- மேலும் அந்த அறிக்கையின் படி மில்கோ நிறுவனத்தின் நவீன மயப்படுத்தும் அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் உற்பத்தி மேற்கொள்வதற்காக எதிர்பார்த்த நாளாந்த பாலின் எண்ணிக்கை 650,000 லீற்றர் தொகை தேவைப்படுவதனால் நாளாந்த பால் சேகரித்தல் வரையறை காரணியாக இருக்கும் என சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. கம்பனியின் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நாளாந்தம் சேகரமாகும் பால் 263,567 லீற்றர்களாக காணப்பட்டமையால் நாளாந்தப் பால் தேவையாகிய 650,000 லீற்றர் வரை அதிகரிப்பதற்காக நாளாந்த பால் சேகரிப்பினை 146.62 சதவீதத்தினால் அதிகரிக்க வேண்டியிருந்தது மற்றும் 2017 திசெம்பர் 31 திகதி அளவில் இலங்கையின் நாளாந்த பால் உற்பத்தி ஆகிய 898,630 லீற்றர்களில் 72.33 சதவீதத்தினையும் கம்பனி கொள்வனவு செய்ய வேண்டியிருந்ததென உறுதிப்படுத்தப்பட்டது.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| | கட்டுப்பாட்டு பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கூட்டிணைந்த மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம் | கூட்டிணைந்த திட்டம் தயாரித்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீடு தயாரித்திருக்கவில்லை. |
| (இ) | திரவப் பால் சேகரித்தல் மற்றும் முகாமைத்துவம் | பால் சேகரிப்பு நிலையங்கள் முறையான மேற்பார்வை செய்யப்படாமை மற்றும் போதியளவு பால் சேகரிப்பு நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டிருக்காமை ஆகிய காரணங்களினால் பால் விரயமாதல். |
| (ஈ) | இருப்பு முகாமைத்துவம் | இருப்புக்களை முறைப்பிரகாரம் களஞ்சியப்படுத்தாமை காரணமாக இருப்புக்கள் வீணாதல், காலவதியாதல் மற்றும் இருப்பு கணித்தல் முறையற்றிருத்தல். |
| (உ) | பிணை முறிகள் | பிணை முறிகள் பாதுகாப்பாக மற்றும் நாளது வரை பேணப்பட்டிருக்காமை. |
| (ஊ) | நிமித்த துணைக் கட்டுநிதி | அங்கீகரிக்கப்பட்ட வரையறையின்றி துணைக் கட்டுநிதிகள் வழங்குதல். |
| (எ) | வாகனக் கட்டுப்பாடு | வாகன சம்பவக் குறிப்பேடுகள் மற்றும் மாதாந்த ஓட்ட அட்டவணைகள் பேணப்படாமை. |
| (ஏ) | நிலையான சொத்துக்கள் முகாமைத்துவம் | நிலையான சொத்துக்களை வருடாந்தம் பௌதீக மெய்மையாய்தல் மேற்கொள்ளாமை மற்றும் நாளது வரை ஆக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்காமை. |